ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2301/40 - 2022 ඔක්තෝබර් මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.10.13

2301/40 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டம்

பிரிவு 2 மற்றும் 5 இன் கீழான கட்டளை

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர், ரணில் விக்கிரமசிங்க, ஆகிய நான், இந்தக்கட்டளை மூலம், இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் தொடர்பாக அதற்கு நேரொத்த பதிவிலே அவ் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவிலான விசேட வியாபார பண்ட அறவீட்டினை விதிக்கின்றேன்.

அட்டவணை

நிரல் I				நிரல் II
	இ. மு. தலைப்பு	இ. மு. குறியீடு	விபரணம்	விசேட வியாபார பண்ட அறவீடு
1	03.02		மீன் புதியது அல்லது குளிரூட்டப்பட்டவை தலைப்பு 03.04 இன் கீழ் தரப்பட்ட முள்ளற்ற துண்டுகளையும் மீன் இறைச்சியையும் தவிர்ந்தவை	10% அல்லது கி. கி. ஒன்றிற்கு 400.00 ரூபா, எந்த வரிவிதிப்பு அதிகமோ அதன் பெறுமதி
	03.03		மீன் குளிரால் உறையச் செய்யப்பட்டவை, தலைப்பு 03.04 இன் கீழ் தரப்பட்ட முள்ளற்ற துண்டுகளையும் மீன் இறைச்சியையும் தவிர்ந்தவை	10% அல்லது கி. கி. ஒன்றிற்கு 400.00 ரூபா, எந்த வரிவிதிப்பு அதிகமோ அதன் பெறுமதி
2	03.05	0305.59.10	மாசி மீனும் அதற்குப் பதிலானவையும்	கி. கி. ஒன்றிற்கு 302.00 ரூபா

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

நிரல் I				நிரல் II
	இ. மு. தலைப்பு	இ. மு. குறியீடு	விபரணம்	விசேட வியாபார பண்ட அறவீடு
3	07.13	0713.31.19	பிற - பச்சைக் கடலை (பாசிப் பயறு)	கி. கி. ஒன்றிற்கு 40.00 ரூபா
4	07.13	0713.40.11	மைசூர் பருப்பு (சிவப்பு பருப்புக்கள்) முழுமையானவை	கி. கி. ஒன்றிற்கு 25.00 ரூபா
		0713.40.12	மைசூர் பருப்பு (சிவப்பு பருப்புக்கள்) பிளக்கப்பட்டவை	கி. கி. ஒன்றிற்கு 25.00 ரூபா
		0713.40.21	மஞ்சல் பருப்புக்கள் முழுமையானவை	கி. கி. ஒன்றிற்கு 25.00 ரூபா
		0713.40.22	மஞ்சல் பருப்புக்கள் பிளக்கப்பட்டவை	கி. கி. ஒன்றிற்கு 25.00 ரூபா
5	08.04	0804.50.50	மங்குஸ்தான் - சோர்வற்ற புதிய	கி. கி. ஒன்றிற்கு 200.00 ரூபா
		0804.50.60	மங்குஸ்தான் - உலர்ந்தவை	கி. கி. ஒன்றிற்கு 200.00 ரூபா
6	08.10	0810.50	கிவி பழம்	கி. கி. ஒன்றிற்கு 175.00 ரூபா

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உற்பத்திக்காக உள்ளூர் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உற்பத்தியாளர்களினால் இறக்குமதி செய்யப்படும் இ. மு தலைப்பு 03.03 கீழான வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலே அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளதுமான இ. மு குறியீடு 0303.54 கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மெகரல் (ஸ்கொம்பர் ஸ்கொம்றஸ், ஸ்கொம்பர் அவுஸ்ராலாசியஸ், ஸ்கொம்பர் ஜபோனிகஸ்) மற்றும் இ. மு. குறியீடு 0303.55 கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஜெக் மற்றும் ஹோஸ் மெகரல் (ட்றாச்றஸ் இன)மீன் மீது பிரயோகிக்கப்படக்கூடிய விசேட வியாபார பண்ட அறவீடான 10% அல்லது கி. கி. ஒன்றிற்கு 400.00 ரூபாவில் இருந்து, கி. கி. ஒன்றிற்கு 6 ரூபாவினை அறவிட்ட பின்பு, மிகுதி தொகையினை விலக்களிக்குமாறு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

3. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டதும் 2022, மார்சு 03 ஆந் திகதிய 2269/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான இ. மு. குறியீடு 0303.54 கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மெகரல் (ஸ்கொம்பர் ஸ்கொம்றஸ், ஸ்கொம்பர் அவுஸ்ராலாசியஸ், ஸ்கொம்பர் ஜபோனிகஸ்) மற்றும் இ. மு. குறியீடு 0303.55 கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஜெக் மற்றும் ஹோஸ் மெகரல் (ட்றாச்றஸ் இன) தொடர்பான கட்டளையானது, 2022, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து வலுவாகுமாறு முடிவுறுத்தப்படுகின்றது.

4. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இந்தக் கட்டளையானது 2022 ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் ஒரு வருட காலப்பகுதிக்கு செல்லுபடியுடையதாகும்.

ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, ஒற்றோபர் 13.

EOG 10 - 0114